ஸ்ரீ :

ஸ்ரீமதே ராமாநுஜாய நம :

நம்பெருமாள் விஜயம்

(ஸத்யம் ஸத்யம் புந: ஸத்யம் யதிராஜோ ஜகத்குரு:)

(மலர் 454) Nov (1) / 2025

நம்பெருமாள், எம்பெருமானார் அருளால் முயன்றவர்கள்

ஸ்ரீ அஹோபில தாஸன் க. ஸ்ரீதரன்

பார்த்தசாரதி ஸ்ரீதரன்

உதவி: க்ருஷ்ணா ஸ்ரீதரன்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:
திருவே தஞ்சம்
திருவரங்கனே தஞ்சம்
தஞ்சமடைந்த நம் ராமானுஜன் திருவடிகளே தஞ்சம்

கைப்பொருள்கள் முன்னமே கைக்கொண்டார் காவிரி நீர்
செய்ப்புரள ஓடும் திருவரங்கச் செல்வனார்
எப்பொருட்கும் நின்று ஆர்க்கும் எய்தாது நான் மறையின்
சொற்பொருளாய் நின்றார் என் மெய்ப்பொருளும் கொண்டாரே.

காவேரி வர்த்ததாம் காலே காலே வர்ஷது வாஸவ:
ஸ்ரீரங்கநாதோ ஜயது ஸ்ரீரங்கஸ்ரீச்ச வர்த்ததாம்

ஸத்யம் ஸத்யம் புந: ஸத்யம் யதிராஜோ ஜகத்குரு:

உட்பொதிவு

1. லக்ஷ்மீ தந்த்ரம் 3

2. திருவாய்மொழி (ஈடு வ்யாக்யானம்)..4

3. பெரியாழ்வார் திருவாய்மொழி (வ்யாக்யானம்)..26

4. பெரிய திருமொழி (வ்யாக்யானம்)..31

Website: www.namperumal.com email: sridharan_book@yahoo.co.in
Blog:namperumal.wordpress.com

ஶ்ரீ:
ஶ்ரீமதே ராமானுஜாய நம:

ஶ்ரீரங்கநாயகி ஸமேத ஶ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:

ஶ்ரீபாஞ்சராத்ர ஆகம நூலான

லக்ஷ்மீ தந்த்ரம்

(பகுதி – 272)

115. ஜ்ஞாநதாரணயாக்ருஷ்ய தீர்த ஸத்தாம் து வைஷ்ணவீம்
மயி சக்தௌ லயம் நீத்வா சிதாநந்தமஹாஸ்பதே
116. ஸ்தூலம் ஜ்ஞாநாக்நிநா தக்த்வா ப்ரஹ்மாநந்தேந பூரயேத்
ஜ்ஞாந சக்த்யாவரோப்யாத தீர்தே ஸத்த்வம் து வைஷ்ணவம்

பொருள் – ஞானத்தின் திடமான பிடிப்பினால், விஷ்ணுவின் தீர்த்தத்தின் சக்தியை ஈர்த்து, அந்தச் சக்தியை, சக்தியும் சிதானந்தத்தின் உயர்ந்த இருப்பிடமும் ஆகிய எனக்குள் ஐக்கியப்படுத்திய பின்னர், ஸ்தூல சரீரத்தை ஞானம் என்னும் தீயினால் எரித்து, ப்ரஹ்மானந்தத்தால் நிரப்பவேண்டும். தீர்த்தத்தில் ஞானத்தின் சக்தியால் விஷ்ணுவின் சக்தியை நிலைநிறுத்த வேண்டும்.

ஶ்ரீரங்கநாச்சியார் திருவடிகளே சரணம்
ஶ்ரீகமலவல்லி நாச்சியார் திருவடிகளே சரணம்

... தொடரும்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:
ப்ரபந்நஜந கூடஸ்தரான ஸ்வாமி நம்மாழ்வார் அருளிச் செய்த

திருவாய்மொழி

இதற்கு ஸ்வாமி வடக்குத் திருவீதிப் பிள்ளை அருளிச் செய்த
முப்பத்தாறாயிரப்படி என்னும் ஈடு வ்யாக்யானம்
மூலமும், எளிய தமிழ்நடையும்
(பகுதி – 419)

6-8-2. மையமர் வாள் நெடும் கண் மங்கைமார் முன்பு என் கை இருந்து
நெய்யமர் இன் அடிசில் நிச்சல் பாலொடு மேவீரோ
கையமர் சக்கரத்து என் கனிவாய்ப் பெருமானைக் கண்டு
மெய்யமர் காதல் சொல்லி கிளிகாள் விரைந்து ஓடி வந்தே

பொருள் – வடிவழகு மற்றும் சொற்களுடைய இனிமை ஆகிய தன்மைகளால் காதலர்கள் இரண்டு பேருக்கும் அண்டுவதற்கு ஏற்றபடியாக உள்ள கிளிகளே! திருக்கரமும் திருச்சக்கரமும் என்பதான சேர்த்தி அழகு கொண்டவனாக; நன்கு பழுத்த கனி போன்று இனிமையான சுவை பொருந்திய உதடுகள் கொண்டவனாக; இப்படியாக என்னை அடிமை கொண்ட எனது ஸ்வாமியாக உள்ள அவனை எனக்கு முன்பாகவே சென்று காணும் பேறு கொண்ட நீங்கள் கண்டு, அவன் குணங்களைப் பாடி மட்டும் உயிரைத் தாங்கி நிறுத்தாமல் உண்மையான சரீரத்துடன் பொருந்தவேண்டும் என்பதான எனது விருப்பத்தைக் கூறவேண்டும்; இதனைக் கேட்ட அவன் உங்கள் சொற்களை ஆதரித்தான் என்பதால் அவனுடன் சேர்ந்து இங்கு வரலாம் என்று நீங்கள் இருக்காமல், விரைவாக என்னிடம் ஓடி வந்து, உங்களுடைய சொற்களுக்குப் பின்னர் அவன் வருவது உறுதி என்பதால், எனது இந்தப் புதிய களிப்பைக் கண்டு தங்களை ஒப்பித்து நிற்பதால், மை தீட்டப்பட்ட ஒளி வீசும் நீண்ட கண்கள் கொண்ட எனது தோழிமார்கள் அருகில் உள்ளபோது, அவன் கையாலே பிடிக்கப்பட்ட எனது

கையை உங்களுடைய பாதங்களுக்குப் பீடமாகக் கொண்டு, நெய்யுடன் சேர்ந்த இனிமையான அடிசில் பாலுடன் சேர்ந்து எப்போது உட்கொள்வீர்களாக.

அவதாரிகை – சில கிளிகளைக் குறித்து, என் ஆற்றாமைபை அவனுக்கு அறிவித்து வந்து, நானும் என் தோழிமாருங் கொண்டாட அத்தை அங்கீகரிக்கவேணும் என்கிறாள். முதற்பாட்டில், அவன் பதங் கொடுத்தாள்; அதுக்கு மேலே ஒரு பதந் தேடிக் கொடுக்கிறாள் இப்பாட்டில். அவன் பதமாகிறது உபயவிபூதியையுங் கொடுக்கையிறே; அதுக்கு மேலான பதமாகிறது அவனாலே விரும்பப்படும் தன்னைக் கொடுக்கை. கொடுக்குமிடத்திலும், "பின்னை முன்னே" என்னாதே, எல்லாருங் காணக் கைமேலேயிறே கொடுக்கப் புகுகிறது.

விளக்கம் – ஒரு சில கிளிகளை நோக்கி, "எனது பிரிவாற்றாமை என்பதை அவனுக்கு உணர்த்தி, இங்கு மீண்டும் வந்து, நானும் எனது தோழிமார்கள் கொண்டாட, அதனை நீங்கள் ஏற்க வேண்டும்", என்கிறாள். முதல் பாட்டில் அவனுடைய உபயவிபூதிகளைப் பரிசாக அளித்தாள். அதற்கு மேலே உள்ள ஒரு பதத்தை, அதாவது இடத்தை, இந்தப் பாட்டில் தருகிறாள். அவனுடைய பதம் என்பது உபயவிபூதிகளையும் அளித்தல் ஆகும். அதனையும் விட உயர்ந்த பதம் என்பது, அவனால் விரும்பப்படும் "தன்னையும் அளித்தல்" என்பது ஆகும். தன்னைத் தரும்போது, "பின்னே முன்னே" என்று கூறாமல், அனைவரும் காணும்படியாகக் கைமேல் அளிக்க முயல்கிறாள்.

வ்யாக்யானம் - (மையமர் வாணெடுங் கண் மங்கைமார் முன்பென் கையிருந்து) அவன்பாடு தரம் பெற்றாரைக் கொண்டாடுவாரைப் போலேயோ என்பாடு தரம் பெற்றாரைக் கொண்டாடுவார் இருப்பது! அந்த:புரத்தில் வர்த்திப்பாரெல்லாரும் ஒருபடிப்பட்டிருக்கிறபடி: ஒரு கண் பார்வையாயிருக்கிறபடி. "தம்மையே நாளும் வணங்கித் தொழுவார்க்குத் தம்மையே ஒக்க அருள் செய்வர்" என்கிறபடியே, இவளும் தன்னோடு ஸர்வதா ஸாம்யங் கொடுத்து வைத்தபடி. (மையமர்) "அஸிதேக்ஷணா", "கருந்தடங்கண்ணி" என்று சொல்லுகிற ஏற்றமெல்லாம் இவர்களுக்குமுண்டிறே. தன்னைப்போல ஸ்வாபாவிகமான கண்ணில் கறுப்பைச் சொல்லிற்றாதல்; அன்றிக்கே, மங்களார்த்தமாக இடும் மையைச் சொல்லிற்றாதல். இவள் அலாபத்தில் இவர்கள் மையெழுதியிருக்கக் கூடாதிறே; நீங்கள் வந்தால் இவர்கள் கண்களிலிருக்கும்படி பாரிகோள்! வாள் - ஒளி. அதுவும் அழிந்திறே

கிடக்கிறது. இவள் வடிவு புகரழிந்து கிடக்க, இவர்கள் கண்களில் ஒளியுண்டாகக்கூடாதே.

விளக்கம் – (மையமர் வாணெடுங் கண் மங்கைமார் முன்பென் கையிருந்து) - அவனுடைய அனைத்தையும் பெற்ற அனுமனை அனைவரும் கொண்டாடுவது போன்று, என்னைப் போன்று கண்கள் உள்ளவர்களைக் கொண்டாடுவார்களோ! அவனைக் கொண்டாடுபவர்களுக்கு உள்ள ஏற்றத்தைக் கூறுகிறார்; அந்தப்புரத்தில் உள்ள அனைவரும் ஒருபடிப்பட்டிருப்பதே ஆகும். ஸுந்தரகாண்டம் – அஸிதேக்ஷணா - கறுத்த கண்கள் கொண்டவள் - என்பதாக அனைவரும் உள்ளதால், ஒரே போன்று பார்வை கொண்டவர்களாக உள்ளனர். அங்குள்ள அனைவருடைய கண்கள் இவளுடையது போன்று இருக்குமோ என்பதற்கு விடை அளிக்கிறார். பெரியதிருமொழி (11-3-5) – தம்மையே நாளும் வணங்கித் தொழுவார்க்குத் தம்மையே ஒக்க அருள் செய்வர் - என்பது போன்று, இவளும் அனைவருக்கும் தன்னோடு ஒப்புமை கூறலாம்படி வைக்கிறாள். (மையமர்) - ஸுந்தரகாண்டம் – அஸிதேக்ஷணா - கறுத்த கண்கள் கொண்டவள் - என்றும்; திருவாய்மொழி (6-5-8) - கருந்தடங்கண்ணி - என்றும் இவளுக்குக் கூறப்படும் ஏற்றங்கள் அனைத்தும், இவளுடன் அந்தப்புரத்தில் உள்ளவர்களுக்கும் உள்ளது. தன்னைப் போன்று இயல்பாகவே கண்களில் உள்ள கருமையைக் கூறுகிறாள் என்று ஒரு பொருள்; அல்லது "மை" என்பதற்கு, மங்களத்தின் அடையாளமாகக் கண்களில் இடப்படும் அஞ்சனம் என்பதை கூறுவதாகவும் கொள்ளலாம். ஆனால் இவள் அவனைப் பிரிந்து நிற்கும்போது, இவர்கள் தங்களுடைய கண்களில் மை தீட்டியிருக்க மாட்டார்கள் அல்லவோ? ஆனால், கிளிகளே! நீங்கள் வந்தால் இவர்கள் கண்களில் மை உள்ளதைக் காண்பீர்களாக! வாள் என்றால் ஒளி, அதுவும் குறைந்தே உள்ளது. இவளுடைய வடிவத்தில் மகிழ்ச்சி குறையுடன் உள்ளபோது, இவர்கள் கண்களில் ஒளி உண்டாகக்கூடாது அல்லவோ?

வ்யாக்யானம் - (நெடுங்கண்) கண்ணில் பரப்படங்கலும் ஸப்ரயோஜநமாவது அப்போதாகாதே. இல்லையாகில், தலைச்சுமையோபாதியாமிறே, "காணாதார் கண்ணென்றும் கண்ணல்ல" என்கிறபடியே. (மையமர் வாணெடுங் கண்) உங்கள் வரவால் வந்த ப்ரீதியாலே "அவன் வரவு தப்பாது" என்று நான் அலங்கரிக்க,

அத்தாலே யலங்கரித்து ஒளியையுடைத்தாய்ப் பெருத்திருந்துள்ள கண்களையுடையவர்கள் என்னுதல்.

விளக்கம் – (நெடுங்கண்) - கண்களில் மையும், ஒளியும் தூது சென்று வந்த பின்னர் ஏற்பட வாய்ப்புள்ளது; ஆனால் நெடுமை என்பது ஏற்படாது அல்லவோ என்பதற்கு விடை அளிக்கிறார்; கண்களின் முழுமையும் ஒரு பயன் அடைவது அப்போது அல்லவோ? அதாவது, தூது சென்று திரும்பி வராத கிளிகளாகிய உங்களைக் கண்ட பின்னர் அல்லவோ? இவைகள் திரும்பாமல் இருந்தால், கண்களானவை தலைக்கு வெறும் ஒரு சுமையாக மட்டுமே இருக்கும். அவ்விதம் கண்கள் தலைச்சுமை போன்று ஆகுமோ என்பதற்கு ப்ரமாணம், பெரியதிருமொழி (11-7-1) - காணாதார் கண்ணென்றும் கண்ணல்ல - பகவத் பாகவதர்களைக் காணாதபோது கண்கள் உள்ளதற்கு ப்ரயோஜனம் ஏதும் இல்லை - என்றாகிறது. (மையமர் வாணெடுங் கண்) - நீங்கள் மீண்டும் வந்தால், உங்களுடைய வரவால் வந்த ப்ரீதி காரணமாக, "அவன் நிச்சயம் வருவான்" என்பதாக நான் எனது கண்களை, மை போன்றவை கொண்டு அலங்காரம் செய்து கொள்ள, அதனால் தங்களுடைய கண்களையும் அலங்காரம் செய்து கொண்டு, ஒளி கொண்டதாக, நீண்ட கண்களைக் கொண்டு இவர்களும் உள்ளனர்.

வ்யாக்யானம் - (மங்கைமார்) அவனுக்குத் "தன்னேராயிரம் பிள்ளைகளை"ப்போலே இவளுக்குத் தன் பருவத்தில் தோழிமார் உண்டாயிருக்கிறபடி. (மங்கைமார்) முக்தர் பஞ்சவிம்சதிவார்ஷிகரா யிருக்குமாபோலே. (மங்கைமார் முன்பு) பின்பு இருக்க வொட்டார்களே! (மங்கைமார்) ஒருவர் இருவரன்றே. எல்லாரும் தனித்தனியே "என் முன்பே, என் முன்பே" என்பர்களே! "ஹநூமந்தம் மஹாத்மாநம் பரிவார்யோபதஸத்திரே" என்று ஓலக்கமாக இருந்து திருவடியைக் கொண்டாடினாற்போலே. "மஹாத்மாநம்" நாலு பேர் சூழவிருந்து கொண்டாடினார் என்கிற இதுதான் தரமோ இவனுக்கு? "உபாயநாந்யுபாதாய மூலாநிச பலாநிச" என்று பலமூலாதிகளைக் கொடுத்து ஸம்ப்ரமித்தார்களிறே முதலிகள்; அப்படியே "நெய்யமர் இன்னடிசிலெ"ன்று இங்கும் எல்லாமுண்டா யிருக்கிறபடி. "பேஜிரே விபுலாநநா:" உண்டிறே அங்கு, இங்கு "மையமர் வாணெடுங்கண்" எல்லார்க்குமுண்டாயிருக்கிறபடி.

விளக்கம் - (மங்கைமார்) - அவனுக்கு, பெரியாழ்வார் திருமொழி (3-1-1) – தன் நேர் ஆயிரம் பிள்ளைகள் - என்பது போன்று, இவளுக்கும் தனது வயதிற்கு ஏற்ற

தோழிமார்கள் உள்ளனர். (மங்கைமார்) - "மங்கை" என்று பருவத்தை கூறி ஏன் உரைத்தார் என்றால், முக்தர்கள் எப்போதும் இருபத்து ஐந்து வயது கொண்டவர்களாகவே உள்ளது போன்று, இவர்களும் எப்போதும் "மங்கை" என்று கூறத்தக்க பருவத்திலேயே உள்ளனர். (மங்கைமார் முன்பு) - பின்பு இருக்கமாட்டனர் என்பதால் "முன்பு" என்கிறாள். (மங்கைமார்) - ஒருவர் இருவர் அல்ல; அனைவரும் தனித்தனியாக "என் முன்பாக, என் முன்பாக" என்று கொண்டாடியபடி இருப்பார்கள். இவ்விதம் ஒருவரைப் பலரும் கொண்டாடியபடி இருந்தார்களோ என்பதற்கு விடை அளிக்கிறார்; ஸுந்தரகாண்டம் (57-31) - ஹநூமந்தம் மஹாத்மாநம் பரிவார்யோபதஸத்திரே - மஹாத்மாவாகிய அனுமனை சிறந்த வானரர்கள் சூழ்ந்து நின்று கொண்டாடினர் - என்று திருவடியைச் சபையில் கொண்டாடியது போன்று ஆகும். ஆனால், "மஹாத்மாநம்" என்று, நான்கு பேர் சூழ நின்று கொண்டாடிய இது மட்டுமே இவனுக்குப் போதுமானதா? மேலும் கூறுகிறார்; ஸுந்தரகாண்டம் (57-33) - உபாயநாநி சாதாய மூலாநி பலாநி ச - கனி கிழங்கு என்பது போன்ற பலவற்றையும் அளித்துக் கொண்டாடினர்கள் - என்பதற்கு ஏற்ப, கனி மற்றும் கிழங்கு போன்று பலவற்றையும் அனுமனுக்கு அந்த வானரர்கள் அளித்து அனுமானைப் பெருமைப்படுத்தினார்கள் அலல்வோ? அது போன்று, "நெய்யமர் இன்னடிசில்" என்பது இங்கு எல்லாருக்கும் உள்ளது என்றாகிறது. ஸுந்தரகாண்டம் (57-47) - பேஜிரே விபுலாநநா: - பருத்த முகம் கொண்டவர்களாக எங்கள் - என்பதாக அங்கு உள்ளது; அதனைப் போன்றே இங்கு "மையமர் வாணெடுங்கண்" எல்லாருக்கும் உள்ளது.

வ்யாக்யானம் - (என் கையிருந்து) "ஏகம் து:கம் ஸுகஞ்சநௌ" என்று, ஸமாந ஸுகது:கைகளாய் இருந்தார்களேயாகிலும், பசித்தாரேயுண்ண வேணுமிறே! அப்படியே, அவர்கள் ஓலக்கமிருக்குமத்தனை; இருப்பிடம் என் கையாக வேணும். அவன் திருமுடிக்கு ஆபரணமான என்னுடைய கையை உங்களுக்குப் பாதபீடமாக்குகிறேன். "ததேள பாஹுலதாம் ஸ்கந்தே" என்னுமாபோலே அவனுக்கு ஸர்வஸ்வதாநம் பண்ணும் கை. பர்யங்க வித்யையிற் சொல்லும் படுக்கையில் இருப்புப் போலுமன்றாகாதே, இவள் கையில் இருப்பு. இவள் "அணிமிகு தாமரைக்கை" என்னுமது அவனுக்கும் உண்டிறே. "மெய்யமர் காதல் சொல்லி" கிளிகாள்! விரைந்தோடி வந்து, என் கையிருந்து நெய்யமர் இன்னடிசில் நிச்சல் பாலொடு மேவீரோ!" என்கிறாள்.

அதுவென்? போகிறபோதே லாலநம் பண்ணி விட்டாலோ? என்னில்; அதுக்குக் கைமுதலுண்டாகவேணுமே? "காத்ரைச்சோகாபி கர்சிதை:" என்றும், "இட்ட காலிட்டகை"யளாயுமிறே இவள் கிடக்கிறது; இனித்தான் கொண்டாடுகைக்கு ஓலக்கமிருப்பாரும் வேணுமே! "எம்மின் முன்னவனுக்கு மாய்வராலோ" என்றிறே அவர்களுங் கிடக்கிறது.

விளக்கம் – (என் கையிருந்து) - கிஷ்கிந்தாகாண்டம் (5-18) - ஏகம் து:கம் ஸுகஞ்சநௌ – சுகமும் துக்கமும் நம் இருவருக்கும் ஒன்றே அல்லவோ - என்று, என்னைப் போன்றே எனது தோழிமார்களுக்கும் சுகதுக்கங்கள் என் அளவிற்கே சமமாக உள்ளபோதிலும், "பசி எடுத்தவர்கள் மட்டுமே உண்பர்", என்பதற்கு ஏற்ப, எனக்கு மட்டுமே சுகமும் துக்கமும் அதிகமாக உள்ளது. அது போன்று அவர்கள் கூட்டம் உள்ளது. "என் கை" என்று ஏன் சிறப்பித்தாள்? மற்றவர்கள் கைகளைக் காட்டிலும் இவளுடைய கைக்கு உள்ள ஏற்றம் என்ன என்பதைக் கூறுகிறாள்; இவனுடைய திருமுடிக்கு ஆபரணமாக உள்ள எனது கையை, கிளிகளாகிய உங்களுடைய பாதங்களுக்குப் பீடமாக வைக்கிறேன். ஆனால் இவளுடைய கைகள், அவன் தனது தலைக்கு ஏற்கும்படியாக விரும்பத்தக்க ஒன்றா என்பதைக் கூறுகிறார்; ஸ்ரீவிபு. (5-13-54) - தத்தௌ பாஹுலதாம் ஸ்கந்தே - க்ருஷ்ணனுடைய தோளில் கொடி போன்ற தனது கையைக் கொடுத்தாள் - என்பது போன்று, அவனுக்கு அனைத்தையும் தருகின்ற கைகள்! பர்யங்க வித்யையில் கூறப்படும் ஆதிசேஷன் என்ற படுக்கையில் இருப்பது போன்று அல்லவே இவளுடைய கைகளில் இருத்தல். அவனுடைய திருக்கரம் அல்லவோ இவளுடைய தலைக்கு ஆபரணமாக, திருவாய்மொழியில் (10-3-5) – அணிமிகு தாமரைக்கை – என்பதில் கூறப்பட்டது? இப்படி உள்ளபோது இவளுடைய கைகள் அவனுடைய தலைக்கு ஆபரணமாக இருக்குமோ? இதற்கு விடை தருகிறார்; இவள் "அணிமிகு தாமரைக்கை" என்பது அவனுக்கும் உண்டு; அதாவது அந்தப் பாசுரத்தில் அவனுடைய திருக்கரத்தை இவள் தனது தலைக்கு ஆபரணமாக ப்ரார்த்தித்தாள்; அதனைப் போன்று இவளுடைய கைகளைத் தனது தலைக்கு ஆபரணமாக இவன் ப்ரார்த்திக்கிறாள். அதாவது "மெய்யமர் காதல் சொல்லி" கிளிகாள்! விரைந்தோடி வந்து, என் கையிருந்து நெய்யமர் இன்னடிசில் நிச்சல் பாலொடு மேவீரோ!" என்கிறாள். இவ்விதம் ஏன் கூறவேண்டும்? அவை செல்லும்போது பாராட்டினால் போதாதோ? இதற்கு விடை கூறுகிறார். இவள் "இட்ட கால் இட்ட கை" என்று தளர்ந்து கிடப்பதால், அந்தக் கண்களுக்கு தனது கைகளை இருப்பிடமாக்கக் கூட

சக்தி இல்லை என்பதை, “அதற்குக் கைம்முதல் வேண்டும்” என்று கூறுகிறார். ஸுந்தரகாண்டம் (40-3) – காத்ரைச்சோகாபி கர்சிதை: - துக்கத்தால் இளைத்த உடல் உறுப்புகள் - என்றும், திருவாய்மொழி (7-2-4) – இட்ட கால் இட்ட கை - என்றும் அல்லவோ இவள் கிடக்கிறாள்! இனி அந்தக் கிளிகளைக் கொண்டாடுவதற்குத் தன்னுடன் கூட்டமாக இருப்பவர்களும் வேண்டும் அல்லவோ? ஏன், தோழிமார்கள் உள்ளனர் அல்லவோ என்றால், திருவாய்மொழி (9-9-5) - எம்மின் முன்னவனுக்கு மாய்வராலோ – என்று அல்லவோ அந்தத் தோழிமார்களும் கிடக்கிறார்கள்!

வ்யாக்யானம் - (நெய்யமர் இத்யாதி) “ஏஷ ஸர்வஸ்வ பூதஸ்து” என்று கொடுக்கைக்கு உடலில்லையே இவளுக்கு. நெய்யோடே கூடின இனிய அடிசிலை நாள்தோறும் பாலோடே கூட நான் தர, அத்தை ஸ்வீகரித்து நீங்கள் என்னை உஜ்ஜீவிப்பிக்க வேணும். “உண்ணுஞ் சோறு பருகு நீர் தின்னும் வெற்றிலையுமெல்லாங் கண்ணன்” என்றிருக்கக் கடவ இவள், இவை உகப்பது தேடி இடுகிறாளிறே. இத்தால் சொல்லிற்றாயிற்று என்? என்னில்; பகவத் விஷயத்தில் உபகாரகராயிருப்பார்க்கு, “உண்பதிலொருகை பகுத்திட்டோமாகில் செய்யலாவதுண்டோ?” என்று கைவாங்குமதல்ல; அவர்கள் விரும்பினவையே தேடியிடவேணும் என்னுமிடம் சொல்லிற்று. “யதந்ந: புருஷோ பவதி” என்னலாவது அவன்பக்கல்.

விளக்கம் - (நெய்யமர் இத்யாதி) - நாயகன் போன்று சரீரத்தைத் தராமல், “நெய்யமர் இன் அடிசில்” போன்றவற்றை ஏன் தரவேண்டும் என்பதைக் கூறுகிறார்; ஸுந்தரகாண்டம் (5-6) - ஏஷ ஸர்வஸ்வ பூதஸ்து - இந்தச் சரீரத்தின் சேர்க்கை அனைத்தும் - என்பதாக, தருவதற்கு இவளிடம் சரீரம் இல்லையே! அதாவது, அவன் அனைத்துவிதங்களிலும் சுதந்திரமானவன் என்பதால், தனது சரீரத்தை அவனுக்குக் கொடுத்தாள்; இவள் அவனுக்கு வசப்பட்டவள் என்பதால், நாயகனைத் தவிர மற்ற யாருக்கும் தனது சரீரத்தைக் கொடுப்பவள் அல்லள் என்று கருத்து. நெய்யுடன் சேர்ந்த இனிய அடிசிலை நான் அன்றாடம் பாலுடன் சேர்த்துத் தர, அதனை நீங்கள் ஏற்றுக்கொண்டு, என்னைப் பிழைக்க வைப்பீர்களாக. ஆனால் தனது உயிர் தாங்கும் நிலை, சரீரத்தை போஷிப்பது மற்றும் இன்பம் ஆகிய அனைத்தும் அவனே என்று உள்ளவள், இவ்விதம் கூறுவாளோ? இதற்கு விடை அளிக்கிறார்; “உண்ணுஞ் சோறு பருகு நீர் தின்னும் வெற்றிலையுமெல்லாங்

கண்ணன்" என்பதாக இருக்கவேண்டிய இவள், இவை எதனை உட்கொண்டால் மகிழ்ச்சி கொள்ளும் என்று ஆராய்ந்து, அவற்றைத் தேடி அளிக்கிறாள். இதன் மூலம் கூறப்பட்டது என்ன? பகவத் விஷயத்தில் நமக்கு உபகாரமாக உள்ளவர்களுக்கு, "நம்மிடம் இருந்த உணவில் ஒரு பகுதியை அளித்துவிட்டோம். இதனைக் காட்டிலும் செய்வது வேறு ஏதேனும் உள்ளதா?", என்று கூறி நிறுத்துதல் என்பது அல்ல; அவர்கள் விரும்பியவற்றைத் தேடி, அவர்களுக்கு அளிக்கவேண்டும் என்பதே கூறப்பட்டது. அயோத்யாகாண்டம் (103-30) – யதந்ந: புருஷோ பவதி - எந்த ஒருவன் எதனை அன்னமாகக் கொள்கிறானோ, அவனுடைய தெய்வமும் அதனையே தனது அன்னமாகக் கொள்கிறது - என்பது அவன் விஷயத்தில் மட்டுமே ஆகும்.

வ்யாக்யானம் - (நிச்சல்) – சேர்ப்பதொரு நாளே, இவர்களுக்குப் பின்பு அநுபவம் நித்யமாயிருக்கிறபடி. "அத்ர பரத்ர சாபி நித்யம் யதீய சரணௌ சரணம் மதீயம்" என்னுமாபோலே. (கையமர் சக்கரத்து என் கனிவாய்ப் பெருமானைக் கண்டு) உண்டாரை உண்ணப் பண்ணுவிக்கத் தேடுகிறாளிறே. இத்தால் சொல்லிற்று, இவர்க்கு முன்னே இவருடைய அபிமதம் இவரைப் பற்றினார்க்கு முற்பட்டிருக்கிறபடி; "வேறாக வேத்தியிருப்பாரை வெல்லுமே மற்றவரைச் சாத்தியிருப்பார் தவம்". (கையமர் சக்கரம்) எப்போதும் கைகழலா நேமியானாயிருக்கை.

விளக்கம் - (நிச்சல்) - அவனுடன் சேர்வது ஒருநாளில் மட்டுமே! அதன் பின்னர் அனுபவம் எப்போதும் இருக்கும். இவ்விதம் அனுபவம் நித்யமாக உள்ளதன் காரணம், இவளுடைய செய்ந்நன்றி அறிதல் என்னும் தன்மையானது, இந்த உலகம் மற்றும் அந்த உலகம் ஆகிய அனைத்திலும் வேறுபாடு இன்றி உள்ளது. அதாவது, ஸ்தோத்ரரத்னம் (3) – அத்ர பரத்ர சாபி நித்யம் யதீய சரணௌ சரணம் மதீயம் - எந்த நாதமுநிகளுடைய இரண்டு திருவடிகளும் என்னை இங்கும் அங்கும் காப்பாற்றுமோ – என்பதாக, இவளுடைய செய்ந்நன்றி அறிதலும் காப்பாற்றும். (கையமர் சக்கரத்து என் கனிவாய்ப் பெருமானைக் கண்டு) - முன்பே உண்டவர்களை, தன்னை உண்ணும்படிச் செய்யத் தேடுகிறாள். இதனால் கூறப்பட்டது என்ன? இவருக்கு முன்பாகவே, இவர் விரும்பியுள்ள வஸ்து, இவரைப் பற்றியபடி உள்ளவர்களுக்கு, முன்பே கிடைக்கும் என்பதாகும்; அதாவது கிளிகள் இவளுக்கு முன்பாகவே அவனை அனுபவித்தன; இதற்கு ப்ரமாணம்

நான்முகன் திருவந்தாதி (18) - வேறாக வேத்தியிருப்பாரை வெல்லுமே மற்றவரைச் சாத்தியிருப்பார் தவம் - என்பதாகும். (கையமர் சக்கரம்) – நான்முகன் திருவந்தாதி (87) - எப்போதும் கை கழலா நேமியான் – என்பதாகவே உள்ளான்.

வ்யாக்யானம் - (என் கனிவாய்) கையுந் திருவாழியுமான அழகைக் காட்டுவது, முறுவலைக் காட்டுவதாய், என்னை அநந்யார்ஹையாக்கினவன். பிரிந்து போகிறபோது, “இவள் ஸத்தைக் கிடக்கவேனும்” என்று பண்ணின ஸ்மிதத்துக்காயிற்று தோற்றது. (என் கனிவாய்) திருவாழிக்கு முற்றூட்டாயிற்றுத் திருக்கை; தமக்கு முற்றூட்டு திருப்பவளம். அவன் ஜீவநத்தை நித்யமாக்கினான், என் ஜீவநத்தைக் காதாசித்கமாக்கினான். அவனுக்கே கையடைப்பாயிற்றே. கைமேலேயிடுமே.

விளக்கம் - (என் கனிவாய்) - திருக்கரமும் திருச்சக்கரமும் சேர்ந்துள்ள அழகைக் காண்பித்தல் மற்றும் தனது புன்முறுவலைக் காண்பித்தல் ஆகியவை மூலம், நான் வேறு யாருக்கும் வசப்படாமல் தனக்கு மட்டுமே வசப்படும்படியாகச் செய்தான். அவன் இவளை விட்டுப் பிரிந்து சென்றபோது, “இவள் இருப்பு நிலைக்கவேண்டும்” என்று செய்து விட்டுச் சென்ற புன்முறுவலைக் கண்டு அல்லவோ இவள் தன்னை இழந்தாள்? (என் கனிவாய்) - திருச்சக்கரம் முழுவதையும் அனுபவித்து, அத்தகைய அனுபவத்தை நாம் நன்கு அனுபவிக்கும்படியாக உள்ள திருவாய். சக்கரத்தாழ்வானுடைய ஜீவனத்தை நித்யமாக்கினான்; எனது ஜீவனத்தை ஒரு காலத்தில் மட்டுமே கிடைக்கும்படிச் செய்தான். அதாவது சக்கரத்தாழ்வானுக்கு மட்டுமே முழு அனுபவம் கிடைக்கும்படி ஆயிற்றே! கை மேலே வைப்பவன்.

வ்யாக்யானம் - (கண்டு) எனக்குப்போலே ஸ்ம்ருதி விஷயமாமளவன்றிறே உங்களுக்கு. இவற்றின் கண்ணாலே காணுதல், இவற்றைக் காணுதலிறே இவளுக்கு; “தாம் ஸ்ப்ருஷ்ட்வா”வாதல், “சந்த்ரே த்ருஷ்டி ஸமாகம:” ஆதல்; தொட்டாரைத் தொடுதல், கண்டாரைக் காணுதலிறே இவளுக்கு. (மெய்யமர் காதல் சொல்லி) திருமேனியிலே அணைய வேண்டும்படியான காதல் என்னுதல்; என்னுடம்போடு அணையவேண்டும்படியான காதல் என்னவுமாம். “காத்ரைச்சோகாபி கர்சிதை: ஸம்ஸ்ப்ருசேயம்” என்னக்கடவதிறே. “நம் ஸத்தை கிடக்கக் கிடக்குமிறே” என்றாதல், “குண ஜ்ஞாநத்தாலே தரித்திருக்கிறாள்”

என்றாதல் நினைத்திருக்குமதல்லவென்று சொல்லுங்கோள். அங்ஙனேயும் தரித்திருந்தார் உண்டிறே; மாயா சிரஸ்ஸைக் காட்டினவன்றும், பிராட்டி, லௌகிகரோடொக்கக் கண்ணநீர் விழ விட்டு, "அதுவேயானாலும் அவருளராகிலல்லது நம் ஸத்தை கிடவாது" என்று தன்னைக் கொண்டு அறுதியிட்டு தரித்திருந்தாளிறே. "அநந்யா ராகவேணாஹம் பாஸ்கரேண ப்ரபா யதா" இறே; ஆதித்யன் உண்டாகிலல்லது ப்ரபையுமில்லையிறே. இங்ஙனேயிருக்கச் செய்தே ஒரு ஹேதுக்களாலே வரும் ஸங்கோச விகாலங்களேயிறேயுள்ளது. த்ரவ்யமாயிருக்கச் செய்தேயும் ப்ரகாரமாம் ஆகாரமுண்டே. அப்படியேயன்றிறே இங்கு; உடம்பிலேயணைந்து பிரிந்தார்க்கு உடம்பை அணைத்தல்லது நிற்கவொண்ணாதிறே.

விளக்கம் - (கண்டு) - "கண்டு" என்பதற்கு மூன்றுவிதமான பொருள்களை அருளிச்செய்கிறார்; அவன் எனது நினைப்பிற்கு மட்டுமே விஷயமாக உள்ளான்; இது போன்று உங்களுக்கு இல்லை; நீங்கள் கண்ணால் காணும்படி உள்ளான்; இவள் அவனைத் தங்கள் கண்களால் காண்கின்றன; அதனைத் தொடர்ந்து இவள் இந்தக் கிளியை கண்டால், அவனைக் காண்பது போன்து இவளுக்கு உள்ளது; இது "கண்டு" என்பதற்கான முதல் பொருள் ஆகும். அடுத்து இரண்டாவது பொருளைக் கூறுகிறார்; "இவற்றைக் காணுதல்" என்பது ஆகும். இதற்கு ப்ரமாணம் யுத்தகாண்டம் (5-9) - தாம் ஸ்ப்ருஷ்ட்வா - தொட்டவர்களைத் தொடுதல், கண்டவர்களைக் காணுதல்; அதாவது ஸீதையைத் தொட்ட காற்று மற்றும் அவளைக் கண்ட சந்திரன் மூலம், இராமன் தான் அவளைத் தொட்டதாகவும் கண்டதாகவும் உணர்ந்தான் கருத்து. காத்ரைச்சோகாபி கர்சிதை: ஸம்ஸ்ப்ருசேயம் - துக்கத்தால் இளைத்துள்ள சரீரத்தையும் உறுப்புகளையும் நன்கு தொடும்படி - என்பது காண்க. "நம்முடைய இருப்பு உள்ளவரை இருக்கும்", "குண ஞானத்தால் பிழைத்திருப்பாள்" என்று நினைத்திருப்பதால், நான் அவ்விதம் இல்லை என்று அவனிடம் கூறுங்கள். அவன் இருப்பு நிலைத்தபடி உள்ளதால், அதன் விளைவாக தங்களுடைய உயிர் தரித்தவர்கள் உள்ளனரோ என்பதற்கு விடை அளிக்கிறார்; அவ்விதம் இருந்தவர்கள் உண்டு. இராவணன மாய தலையைக் காண்பித்தபோது, ஸீதையும் மற்றவர்கள் போன்று கண்ணீர் விட்டவளாக, "இது அவர் இல்லை. அவர் இருப்பு இல்லை என்றால், இது போன்று நம்முடைய இருப்பு இப்போது இருக்காது", என்று தனது இருப்பு மூலமாக இராமன் குறித்த விஷயத்தில் தீர்மானித்தாள் அல்லவோ? இவ்விதம் இராமன் உள்ளபோது இருப்பவளாகவும்,

அவன் இல்லாதபோது இவளும் இல்லாதவள் என்பதாகக் கூறும்படி பிரிக்கப்படாமல் உள்ளவளோ என்பதற்கு ப்ரமாணம் காண்பிக்கிறார்; ஸுந்தரகாண்டம் (21-15) - அநந்யா ராகவேணாஹம் பாஸ்கரேண ப்ரபா யதா - சூரியனிடத்தில் உள்ள ஒளி போன்று நான் இராமனை விட்டு நீங்கமாட்டேன் - என்பது காண்க. ஆதித்யன் இல்லையென்றால் ஒளியும் இல்லை அல்லவோ? ஒளி போன்று பிரிக்க இயலாதபடி உள்ளவனுக்குப் பிரிவு ஏற்படுமோ என்பதற்கு விடை அளிக்கிறார். இவ்விதம் உள்ளபோதிலும் சில காரணங்களால் சுருக்கமும் மலர்தலும் ஏற்படவே செய்கின்றன; அதாவது பிரியாதபடி உள்ளவன் என்றாலும் தேவலோகப் பெண்களுடைய சிறை வாசம் போக்குவதற்காக, பிரிவாகத் தோன்றியது; ஆனால் உண்மையில் இவ்விதம் பிரிவு இல்லை. ஒரு குறிப்பிட்ட பொதுத்தன்மை அல்லது குணம் தவிர, பொருளுக்குப் பிரியாத தன்மை இருக்குமோ என்றால் திரவியமாக உள்ளபோதிலும், இன்ன விதம் என்னும் நிலை உள்ளது அல்லவோ? இதுவரை, “அவன் இருப்பு நிலைத்தால் இவளும் நிலைப்பாள்”, என்பதை விரிவாகக் கூறி, பிராட்டியைக் காட்டிலும் பராங்குச நாயகிக்கு உள்ள வேற்றுமையை அடுத்து கூறுகிறார். அது போன்று இங்குஇல்லை; அதாவது அவனுடைய இருப்பால் உயிர் தரித்தல், குண ஞானத்தால் பிழைத்தல் போன்றவை இங்கு இல்லை. உடலில் அணைத்துப் பிரிந்தவர்களுக்கு, மீண்டும் உடலுடன் அணைத்தால் தரிக்க இயலும்.

வ்யாக்யானம் - (மெய்யமர் காதல்) “தம்மைப்போலே பொய்யுமாய் நிலை நில்லாத காதலன்று எங்களது என்று சொல்லுங்கோள்” என்று பிள்ளான் பணிக்கும். அன்றிக்கே, (மெய்யமர் காதல்) ஆத்மாநுபந்தியான காதல். மெய்யென்று ஆத்மாவாய், ஆத்மாவோடே பொருந்தின காதல் என்றுமாம். “மெய்ம்மையே மிகவுணர்ந்து” என்கிறவிடத்தில், மெய்யென்கிறது ஆத்மாவையிறே. ஸத்யமான காதல் என்றபடி. (சொல்லி) தந்தாமுக்கு இல்லாதவை பிறர் வாயிலே கேட்டறியுமித்தனையிறே. தமக்கு உண்டாகில் இப்படி தூதுவிடப் பார்த்திராரே. காட்சிக்கு மேலே ஒரேற்றம் போலே காணும் தன் தசையை அவனுக்கு அறிவிக்கை. (கிளிகாள் விரைந்தோடி வந்தே) பிராட்டியைக் கண்டு மீண்ட அநந்தரம் முதலிகள் வந்து பெருமாளை யுகப்பித்தாற்போலவும், பெருமாள் மீண்டு எழுந்தருளுகிறபோது திருவடி முன்னே வந்து ஸ்ரீபரதாழ்வானை யுகப்பித்தாற்போலவும், நீங்கள் முன்னே வரவேணும்.

விளக்கம் - (மெய்யமர் காதல்) – "மெய்யமர் காதல்" என்பதற்கு மூன்றாவது விதமாக வேறு ஒரு பொருளையும் அருளிச்செய்கிறார். "எங்களுடைய காதலானது, அவனுடைய காதல் போன்று பொய்யாகவும், நிலையாக நிற்காததும்அல்ல என்று அவனிடம் நீங்கள் கூறுவீர்களாக", என்று இவள் கூறுவதாகப் பிள்ளான் உரைப்பார். அல்லது, நான்காவதாக ஒரு பொருளையும் அருளிச்செய்கிறார்; ஆத்மாவுடன் ஒன்று பட்டுள்ள காதல் என்று கொள்ளலாம். மெய் என்பது ஆத்மா என்று கொண்டு, ஆத்மாவுடன் பொருந்திய காதல் எனலாம். ஆனால் "மெய்" என்ற சொல்லானது, சரீரத்தை அல்லாமல் ஆத்மாவைக் குறிக்குமோ என்றால், "மெய்மையே மிக உணர்ந்து" என்று இந்தப் பதத்தால் ஆத்மா அல்லவோ கூறப்பட்டது! அல்லது ஸத்யமான காதல் என்று கருத்து. (சொல்லி) - தன்னிடம் இல்லாத காதல் குறித்து மற்றவர்கள் வாய் மூலமாகக் கேட்டாவது அறியலாம் அல்லவோ? அவனுக்கு இது போன்ற காதல் இல்லை என்று கூறுவது எப்படி? இவ்விதம் இருந்தால், இது போன்று தூது விடும்படியான நிலை ஏற்படும் வரை பார்த்திருக்க மாட்டான் அல்லவோ? அவனை இவை சென்று காண்பதைக் காட்டிலும், எனது நிலையை அவனிடம் கூறுதல் மேலும் ஏற்றம் என்கிறாள். (கிளிகாள் விரைந்தோடி வந்தே) - அவனைக் கண்டவுடன் வேகமாக ஓடி வருதலின் ப்ரயோஜனத்தைக் கூறுகிறார். ஸீதையைக் கண்ட அனுமன் விரைவாக வந்து இராமனை மகிழ்வித்தது போன்றும், இராமன் மீண்டும் அயோத்தி திரும்புவதற்கு முன்பாக, அனுமன் முன்பாகவே வந்து, ஸ்ரீபரதாழ்வானை மகிழ்வித்தது போன்றும், அவன் இங்கு வருவதற்கு முன்பாகவே நீங்கள் வரவேண்டும்.

வ்யாக்யானம் - (கிளிகாள் விரைந்தோடி வந்தே) அறிவித்துக் கூட வரவிராதே கிடிகோள். திருவடி பிராட்டியைத் தேடிப் போகிறபோது பண்ணின அபிஸந்திகளெல்லாம் இக்கரையிலே கழித்துப் பின்பு லங்கையிலே போய்ப்புக்கு எங்குந் தேடி, அவளைக் கண்டு, அநந்தரம் "இக்காட்சியால் ப்ரயோஜநமுள்ளது அவ்வாச்ரயமுள்ளபோதே சென்றறிவிக்கிலிறே" என்று ஒருநாளே வந்தானிறே; அதுக்கடி, போகிறபோது இவராற்றாமையைக் காண்கையாலே, "நாம் வருமளவும் இவரைக் கிடக்கையரிது" என்றிருந்தான்; பெருமாள் தாமும், "பிள்ளாய்! நீயிருக்கிற போதைத் தரிப்புக் கொண்டு நீ போனாலும் இப்படியிருப்பன் என்றிராதேகிடாய் என்னளவறிந்து கார்யஞ்செய்" என்றாரிறே.

விளக்கம் - (கிளிகாள் விரைந்தோடி வந்தே) - அவன் வருவதற்கு முன்பாக ஏன் விரைந்து வரவேண்டும்? அவனுடன் சேர்ந்து வரலாம் அல்லவோ என்பதற்கு விடை அளிக்கிறார்; "அதற்கு முன்பாக எனது இருப்பு அழியும்" என்பதை இவற்றிடம் உணர்த்துவதற்காக, "அவனிடம் கூறிய பின்னர், அவனுடன் சேர்ந்து வர முயலாதீர்கள்", என்கிறாள். நீங்கள் அவனுடன் வந்தால், நீங்கள் வருவதற்கு முன்பாக எனது இருப்பு அழியும்; எனவே நான் உயிர் தாங்குவதற்கு ஏற்றவகையில் நீங்கள் விரைந்து வாருங்கள் என்று கூறுவதற்குத் திருவுள்ளம் கொண்டவராக, ஓர் உதாரணம் கூறுகிறார். அனுமான் ஸீதையைத் தேடிச் சென்றபோது ஸுக்ரீவனிடம் "ஒரு மாதத்தில் வருகிறோம்" என்பது போன்ற கால வரையறைகளை இந்தக் கரையில் கழித்து விட்ட பின்னர், இலங்கையில் சென்று தேடப் புகுந்து, அங்கு தேடி, ஸீதையைக் கண்ட பின்னர், "இவரை நான் கண்டது என்பது எப்போது பயன் அளிக்கும் என்றால், அந்த கரைக்குச் சென்று, இராமனின் சரீரம் உள்ளபோதே இதனை அறிவித்தால் அல்லவோ?", என்று எண்ணி, அனுமன் ஒரே நாளில் திரும்பினான் அல்லவோ? அதன் காரணம் என்ன? நாம் அங்கு செல்வதற்கு முன்பாக இராமனுடைய பிரிவாற்றாமையைக் கண்டு, "நாம் அங்கு சென்று திரும்பும் நாள் முடிய இவர் உயிர் பிழைத்தால் அரிது" என்று எண்ணியதால் ஆகும். இராமனும் அனுமனிடம், "குழந்தாய்! நீ இங்குள்ளபோது உயிர் தரித்தபடி உள்ள நான், எனது இந்த நிலையைக் கண்ட பின்னர் நீ சென்றாலும், நான் தொடர்ந்து இது போன்றே இருப்பேன் என்று எண்ணாமல் இருப்பாயாக. எனது கால அளவு அறிந்து கார்யம் செய்வாயாக", என்றது காண்க.

வ்யாக்யானம் - (விரைந்தோடி வந்தே) நீங்கள் முற்பட வந்த ப்ரீதி ஸாத்மித்தால், பின்பு அவன் வரவாக வேணும். அவனுடனே கூடவரில் வாய்புகு நீராய் உங்களைக் கொண்டாடவொண்ணாது; ஆன பின்பு, நான் முறை கெடாமல் அநுபவிக்கும்படி பாருங்கோள்! உபகாரகரான உங்கள் காலிலே முற்பட விழுந்த பின்பு அவன் காலிலே விழும்படி பண்ணுங்கோள். ஆகையிறே, நம் முதலிகள் குருபரம்பரை முன்னாக த்வயாநுஸந்தாநம் பண்ணுகிறது. இனித்தான் சிஷ்யனுக்கு ஆசார்யாநுவர்த்தகம் பண்ணலாவது அவன் தேஹ பரிக்ரஹம் பண்ணியிருக்கிற நாளிலேயிறே; பின்புள்ளதெல்லாம் பகவதநுபவத்திலே அந்வயிக்குமிறே இருவர்க்கும். அவன் "எனக்கு" என்னும் நாளிலேயிறே, இவன் "உனக்கு" என்று கொடுக்கலாவது?

விளக்கம் - (விரைந்தோடி வந்தே) – “அவனுடன் சேர்ந்து வந்தால் என்ன?”, என்பதற்கு இரண்டாவது விதமாகப் பொருள் கூறுகிறார். நீங்கள் முற்பட வந்த ப்ரீதியைப் பொறுத்துக் கொண்டால், பின்பு அவன் வரவாக இருக்கவேண்டும். இதனை விடுத்து நீங்கள் அவனுடன் சேர்ந்து வந்தால், வாய்புகு நீராக உங்களைக் கொண்டாட இயலாது. ஆகவே நான் முறை கெடாமல் அனுபவிக்கும்படியாக விரைந்து வருவீர்களாக! இங்கு முறை என்பது என்ன? உபகார செய்த உங்கள் கால்களில் நான் முதலில் விழுந்து எழுந்த பின்னர், அவன் காலில் விழுதல் என்பதே முறை ஆகும். இவ்விதம் ஆகும்படி நீங்கள் செய்யவேண்டும். அடுத்து, “விரைந்து ஓடி வந்து” என்பதற்கு அருளிச்செய்த மூன்று பொருள்களில், மூன்றாவது பொருளுக்கான தனது உபதேசத்தை “ஆசையாலிறே - ஆசையால் அல்லவோ” என்றும், “இனித்தான்” என்றும் தொடங்கும் இரண்டு வாக்கியங்கள் மூலம் இரண்டுவிதங்களில் அருளிச்செய்கிறார். இதில் முதல் பொருள்: இதனால் அல்லவோ நம்முடைய முன்னோர்கள் குருபரம்பரை முன்னாக த்வயத்தை எப்போதும் கூறினர்; அதாவது குருபரம்பரை முன்பாக ஸர்வேச்வரனை வணங்க வேண்டும் என்பதால், கிளிகளை முன்பே வரக் கூறுகிறாள் என்ற் கருத்து. அடுத்து இரண்டாவது பொருள்: சிஷ்யன் ஆசார்யனுக்குப் பணிவிடை செய்தல் என்பது, சிஷ்யனுடைய சரீரம் உள்ளவரை மட்டுமே அல்லவோ? அதன் பின்பு செய்யும் அனைத்தும், பகவத் அனுபவத்தில் அடங்கும் அல்லவோ? அதாவது, சிஷ்யன் பகவானை அடைந்த பின்னர் ஆசார்யனுக்குத் தொண்டு செய்யமுடியாது என்பதால், கிளிகளாகிய உங்களுக்கு நான் தொண்டு செய்யும்படி முன்பாக வரவேண்டும் என்று கூறுகிறாள். அவன் “எனக்கு” என்ற நாளில் அல்லவோ இவள் “உனக்கு” என்று அளிக்க இயலும்?

6-8-3. ஓடிவந்து என் குழல் மேல் ஒளி மாமலர் ஊதீரோ
கூடிய வண்டினங்காள் குருநாடு உடை ஐவர்கட்கு ஆய்
ஆடிய மா நெடும் தேர்ப்படை நீறு எழச் செற்ற பிரான்
சூடிய தண் துளவம் உண்ட தூமது வாய்கள் கொண்டே

பொருள் – நன்கு கூடியுள்ள வண்டுகளே! குரு என்ற நாட்டின் நிர்வாஹகராகிய பாண்டவர்கள் ஐந்து பேருக்கு, வெற்றி பொருந்திய குதிரைகள் கட்டப்பட்ட தேர்களும், பெருத்த படைகளும் வெறும் துகள்களாக மாறும்படியாக அழித்த பெரும் உபகாரகனாகிய க்ருஷ்ணன், தனது திருக்குழலில் சாற்றிக் கொண்ட,

களைப்பைப் போக்கவல்ல துளசியிலிருந்து பருகிய தெளிவான மதுவைக் கொண்ட வாயை உடையவர்களாக, சட்டென வந்து, அவனுக்கு அனைத்துவிதங்களிலும் இனிமையாக உள்ள எனது கூந்தலில் உள்ள அழகான மலர்கள் மீது, நீங்கள் பருகிய மதுபானத்தின் நறுமணம் வீசும்படியாக ஊதவேண்டும்.

அவதாரிகை – சில வண்டுகளைக் குறித்து, அவனுக்கு என் தசையை அறிவித்து வந்து என் தலை மேலே வர்த்தியுங்கோள் என்கிறாள்.

விளக்கம் – ஒரு சில வண்டுகளை நோக்கி, "நீங்கள் சென்று அவனுக்கு எனது நிலையை உணர்த்தி, இங்கு வந்து எனது தலை மீது இருப்பீர்களாக", என்கிறாள்.

வ்யாக்யானம் - (ஓடி வந்து) கடுக வரவேணும். என்னளவு கண்டு போகிற உங்களுக்கு, நானுள்ளபோதே வந்து உதவ வேணும். அன்றிக்கே, அவற்றையநுபவிக்கையில் உண்டான த்வரையாலேயாதல், சடக்கென வரவேணுமென்கிறாள். (என் குழல் மேல்) பேரளவுடையார்படும் ஈடுபாட்டைக் கண்டு, தன் குழல் வீறு தானறிந்திருக்குமே. "சூடிய தண்டுளபமுண்ட தூமது வாய்கள் கொண்டு ஓடி வந்தென் குழல் மேல் ஒளி மாமலரூதீரோ" என்பானென், கார்யஞ்செய்து சமைந்தால் கைக்கூலி கொடுப்பாரைப் போலே? என்னில்; இவற்றுக்கு இவள் குழலில் விஷயமுண்டாக வேணுமே. இப்போது, மது மாறிச் சருகாயிறே கிடக்கிறது; இவை மீண்டாலிறே இத்தலையில் செவ்வி பிறப்பது.

விளக்கம் - (ஓடி வந்து) - விரைந்து வரவேண்டும். கடந்து பாசுரத்தின் இறுதியில் "விரைந்து ஓடி வந்தே" என்று கூறினார்; இதன் பொருளைத் தொடர்ந்து இங்கு எடுத்து வந்து, என்னைப் பிரிந்து இருப்பதற்கு உங்களால் இயலாது என்பதை "என் அளவு" என்றுள்ள இரண்டு வாக்கியத்தால் கூறுகிறார்; எனது நிலையைக் கொண்டு செல்லும் நீங்கள், நான் உயிருடன் உள்ளபோதே வந்து உதவவேண்டும். அல்லது அவற்றைக் கண்டு அனுபவிக்கும்போது ஏற்பட்ட விரைவு காரணமாக சட்டென்று வரவேண்டும். (என் குழல் மேல்) – ஆனால் "என் குழல் மேல்" என்று தனது கூந்தலைத் தானே கொண்டாடலாமா என்பதற்கு விடை அளிக்கிறார்; மிகுந்த மேன்மை கொண்ட ஸர்வேச்வரனும் தனது கூந்தல் மீது அடையும் ஈடுபாட்டைக் கண்டு, தனது கூந்தலின் மேன்மையை இவள் தானே அறிவாள்.

"சூடிய தண்டுளபமுண்ட தூமது வாய்கள் கொண்டு ஓடி வந்தென் குழல் மேல் ஒளி மாமலரூதீரோ" - என்று ஏன் கூறவேண்டும்? அதாவது கார்யம் செய்து முடித்த பின்னர் கைக்கூலி தருபவர்கள் போன்று ஏன் கூறவேண்டும்? இதற்கு விடை கூறுகிறார்; அந்த வண்டுகளுக்கு இவள் கூந்தலில் தேன் இருந்தால் அல்லவோ வருவதற்கு ஈடுபாடு உண்டாகும்? ஆகவே இவ்விதம் கூறினாள். இப்போது தேன் இல்லையோ என்றால், அப்போது இவளுடைய கூந்தல் மலர்கள் இன்றி தேன் இல்லாமல் காய்ந்த சருகு போன்று உள்ளது; இந்த நிலையிலிருந்து வெளிவந்தால் அல்லவோ அவனுக்கு இவள் மீது ஈடுபாடு உண்டாகும்?

வ்யாக்யானம் - (என் குழல் மேல்) அவனுக்குத் தூது போய் வந்தாரிற்காட்டில் இவளுக்குத் தூது போனார்க்கு உண்டான தன்னேற்றம் இருக்கிறபடி. அங்கு மஹாராஜருடைய மதுவநமிறேயழிந்தது; இங்கு அவன் காவற்காட்டை உங்களுக்குத் தருகிறேனென்கிறாள். "அளகாடவி"யிறே. தலையான பரிசிலிறே இதுதான். ததிமுக ப்ரப்ருதிகளுடைய விலக்குகையும் இல்லையிறேயிங்கு. சாந்தனான திருவடியிறே "அஹமாவாரயிஷ்யாமி யுஷ்மாகம் பரிபந்திந:" என்றான். பிராட்டியைக் கண்டு உவந்தமையறியாதே யிருக்கச் செய்தேயும் மது வநம் அழிந்தமையைக் கண்டு, மஹாராஜருடைய வால் ருச்யமூக பர்வதத்திலே யறைந்ததிறே. "நம்மோடு பண்ணிப் போன ஸமயம் அதிக்ரமித்திருக்கச் செய்தேயும் மது வநமழிக்கும்போது பிராட்டியைக் கண்டார்களாக வேணுமிறே". "பிராட்டியைக் கண்ட ஹர்ஷம், நடுவில் மது வநமன்றாகில் ராஜபுத்திரர்கள் முதுகோடேபோம்" என்று பட்டரருளிச் செய்வர்.

விளக்கம் – (என் குழல் மேல்) - அவனுக்காகத் தூது சென்று வந்தவரைக் காட்டிலும் இவளுக்காகத் தூது சென்று வந்தவர்களுக்கு உள்ள ஏற்றம் என்ன? அங்கு தூது சென்று திரும்பியவுடன் தூது சென்று ஸுக்ரீவனுடைய மதுவனம் அழித்தது; இங்கு அவன் ஈடுபாடு கொள்ளும் காட்டையே உங்களுக்குத் தருகிறேன் என்பதே ஏற்றம் ஆகிறது. ஆனால் இவளுடைய கூந்தல் காடோ என்பதற்கு விடை தருகிறார். அளகடாவி அல்லவோ? மேன்மையான பரிசு இது அல்லவோ? ததிமுகன் போன்றவர்களுடைய காவல் என்பதை விலக்குவது போன்ற செயல்கள் எதுவும் இங்கு இல்லை அல்லவோ? மதுவனத்தில் விலக்கியவர் உண்டோ என்பதற்கு விடை அளிக்கிறார்; ஸுந்தரகாண்டம் (62-2) - அஹமாவாரயிஷ்யாமி யுஷ்மாகம் பரிபந்திந: - சாந்தமாக உள்ள திருவடியான அனுமான் அல்லவோ, "நான் உங்கள் பகைவர்களைத் தடுக்கிறேன்" என்றான் - என்பது காண்க. அனுமன்

ஸீதையைக் கண்டு வந்தான் என்பதை அறியாமல் உள்ளபோதிலும், மதுவனத்தை வானரர்கள் அழித்ததைக் கண்டு, அனுமன் ஸீதையைக் கண்டான் என உணர்ந்த மகிழ்வில், ஸுக்ரீவனுடைய வாலானது, ருஷ்யமூக பர்வதத்தைக் கோபத்தால் அறைந்தது அல்லவோ? அதன் பின்னர், “இந்த வானரர்கள் நம்முடன் கூறி விட்டுச் சென்ற காலக்கெடு முடிந்த பின்னர் மதுவனத்தை அழித்தார்கள் என்றால், அவர்கள் ஸீதையை நிச்சயம் கண்டிருக்க வேண்டும்”, என்று எண்ணினான். “இவர்கள் ஸீதையைக் கண்டதன் மூலம் ஏற்பட்ட மகிழ்ச்சியானது, நடுவில் மதுவனம் இல்லையென்றால், இராம லக்ஷ்மணர்கள் முதுகில் காண்பிக்கப்பட்டிருக்கும்”, என்று பராசரபட்டர் கூறுவர்.

வ்யாக்யானம் - (என் குழல் மேலொளி மாமலரூதீரோ) என்றும் இவள் குழலில் மது பாநம் பண்ணப் பெறுவது வண்டுகளேயாகாதே “தூவியம் புள்ளுடைத் தெய்வ வண்டா”தல் இவையாதல். அவனேயோ ஸாம்யாபத்தி தரவல்லான்; நானும் உங்களுக்கு அவனோட்டை ஸாம்யாபத்தியைத் தருகிறேனென்கிறாள். “ஸோச்நுதே” என்கிறபடியே, உங்களையும் அவனையும் ஒரு கலத்திலே யூட்டுகிறேனென்னென்கிறாள். தலையான ஊணிறே. (என் குழல் மேலொளி மாமலரூதீரோ) உங்கள் வரவாலே தளிர்த்திருக்கிற என்னுடைய குழலில், ஒளியையுடைத்தாய் ச்லாக்யமான மலரில் மதுவைப் பானம் பண்ணீரோ? (ஊதீரோ) மதுவின் ஸம்ருத்தியாலே, கிண்ணகத்தில் இழிவாரைப்போலே தனித்து இழியமாட்டாதே நின்று பறக்கிறபடி உங்கள் கார்யமுமாய் பாரக்ஷணமுமானால் ஆறியிருக்கிறதென்? என்கை.

விளக்கம் - (என் குழல் மேலொளி மாமலரூதீரோ) - இவளுடைய கூந்தலில் எப்போதும் மதுவைப் பருகியபடி இருப்பது வண்டுகளே அல்லவோ? அதாவது திருவாய்மொழி (9-9-4) - தூவியம் புள்ளுடைத் தெய்வ வண்டு – என்பதாக உள்ள வண்டுகள் அல்லது அங்கு சென்று வந்த வண்டுகள். அவன் தன்னோடு ஒப்புமையை அளிக்கவல்லவன் ஆவான்; நான் உங்களுக்கு அவனுக்கு நிகரான இன்பத்தைத் தருகிறேன். அதாவது, உபநிஷத்தில் – ஸோச்நுதே - என்பதற்கு ஏற்ப, உங்களையும் அவனையும் ஒரு கலத்தில் கலந்து ஊட்டுகிறேன் என்கிறாள். தலையான ஊண் அல்லவோ? (என் குழல் மேலொளி மாமலரூதீரோ) – உங்களுடைய வரவு காரணமாகத் தளிர்த்துள்ள எனது கூந்தலில், ஒளியை வீசியபடி, கொண்டாடத்தக்க மலர்களில் உள்ள மதுவைப் பருகமாட்டீரோ?

(ஊதிரோ) - மதுவின் நிறைவு காரணமாக, வெள்ளத்தில் இறங்குபவர்கள் போன்று தனித்து இழியாமல், நின்று பறந்தபடி உள்ளதைக் கூறுகிறாள். உங்களுடைய செயலான, அங்கு சென்று எனது நிலையைக் கூறுதல் மற்றும் மதுபானம் செய்தல் ஆகியவற்றைச் செய்யாமல் இருப்பது ஏன்?

வ்யாக்யானம் - (கூடிய வண்டினங்காள்) மஹாராஜரைப்போலே படை திரட்ட வேண்டாவிறே யுங்களுக்கு. என்னுடைய ரக்ஷணத்திலே யொருப்பட்டு முன்பே திரண்டிருக்கப் பெற்றதிறே. இளையபெருமாள் கிஷ்கிந்தா த்வாரத்திலே சென்று குணகீர்த்தனம் பண்ணின பின்பிறே படைதிரட்டிற்று! (குரு நாடுடை ஐவர்கட்காய்) பிறர் மஹிஷிகள் குழல் பேணாமையைக் கண்டு வருந்துமவன்கிடீர்; "மைத்துனன்மார் காதலியை மயிர் முடிப்பித்தவர்களையே மன்னராக்கி" என்கிறபடியே. ராஜ்யமுடையார் பாண்டவர்களே; நாம் அவர்களுக்கு ஏவல் தேவை செய்து நிற்கிறோமென்றாயிற்று அவன் நினைத்திருப்பது. (குரு நாடுடை ஐவர்) துர்யோதநாதிகள் கிடந்தானைக் கண்டேறினவோபாதியிறே. "நாடுடை மன்னர்" என்கிறபடியே ராஜ்யம் அவர்களதே. "துர்யோதநாதிகள் ராஜ்யம் பண்ணுகை வல்லடி" என்றிருக்கும் பகவதபிப்ராயத்தாலே சொல்லுகிறார்; அவன் நினைவேயிறே இவர்க்கும் நினைவு.

விளக்கம் - (கூடிய வண்டினங்காள்) - ஸுக்ரீவனைப் போன்று பெரும்படையை நீங்கள் திரட்டவேண்டாம். எனது ரக்ஷணத்திற்காக முன்பே திரட்டப்பட்டது அல்லவோ? லக்ஷ்மணன் கிஷ்கிந்தை சென்று இராமனுடைய குணங்களைக் கூறிப் புகழ வேண்டியதாக இருந்தது அல்லது சிறிய நாண் ஒலியை உண்டாக்க வேண்டியதாக இருந்தது அல்லவோ? (குரு நாடுடை ஐவர்கட்காய்) – இதனைக் கேட்ட அந்த வண்டுகள், "நாங்கள் அவனிடம் சென்று உனது நிலையைக் கூறினால் அவன் வந்து விடுவானோ?" என்பதற்கு விடை அளிக்கிறார்; மற்றவர்களாகிய பாண்டவர்களின் மனைவி தனது கூந்தலைப் பேணாமல் இருந்ததைக் கண்டு வருந்தியவன் அல்லவோ? இவ்விதம் உள்ளபோது, இங்கு அவன் மனைவியாகிய எனது கூந்தலின் நிலையைக் கண்டு என்ன செய்வான் என்பதைக் கூறவும் வேண்டுமோ? அவ்விதம் அவன் பாண்டவர்கள் விஷயத்தில் வருந்தியதற்கு ப்ரமாணம் காண்பிக்கிறார்; பெரியாழ்வார் திருமொழி (4-9-6) - மைத்துனன்மார் காதலியை மயிர் முடிப்பித்தவர்களையே மன்னராக்கி - என்பதற்கு ஏற்ப "இந்த ராஜ்யத்திற்கு உரியவர்கள் பாண்டவர்கள் அல்லவோ? நாம் அவர்கள் கூறுவதைக் கேட்டு நடப்போம்", என்றிருந்தான். (குரு நாடுடை ஐவர்கட்காய்) - ஆனால் குரு நாட்டிற்கு உடையவர்கள் துர்யோதன் போன்றவர்கள் அல்லவோ

என்பதற்கு விடை கூறுகிறார். துரியோதன் போன்றவர்கள் கிடந்த யானை மீது ஏறியவர்கள் அல்லவோ? அதாவது, பாகனுடைய அனுமதி இன்றி, ஒரு இடத்தில் படுத்தபடி உள்ள யானை மீது ஏறினால், அந்த யானையால் தள்ளப்படுவது போன்று, அவர்களும் முறை தவறி ராஜ்யத்தில் அமர்ந்ததால் தள்ளப்பட வேண்டியவர்கள் என்று கருத்து. ஆனால் துரியோதன் போன்றவர்களும், ராஜ்யம் தங்களுடையதே ஆகும் என்று எண்ணியபடி உள்ளபோது, "கிடந்தானை கண்டு ஏறினதைப் போன்று" என்று கூறமுடியுமோ என்பதற்கு விடை கூறுகிறார்; திருவாய்மொழி (6-6-4) – நாடுடை மன்னர் – என்பதற்கு ஏற்ப ராஜ்யம் அவர்களுடையதே; "துர்யோதநாதிகள் ராஜ்யம் பண்ணுகை வல்லடி" என்று உள்ள பகவானுடைய சிந்தனைக்கு ஏற்ப கூறுகிறார். அவளுடைய சிந்தனையும் ஆழ்வாருடைய சிந்தனையும் ஒன்றே அல்லவோ?

வ்யாக்யானம் - (ஆடிய மாநெடுந் தேர்) மநோஹரமாம்படி ஸஞ்சரியா நின்ற குதிரை பூண்ட பெருந்தேரை உபகரணமாகக் கொண்டு. "மஹதி ஸ்யந்தநே ஸ்த்திதௌ" என்னும்படியிருக்கிற தேரைக் கொண்டு. (படை நீறெழச் செற்ற பிரான்) ஆயுதமெடாமைக்கு அநுமதி பண்ணுகையாலே, தேர்க்காலாலே ஸேநையைத் துகளாக்கினான். (செற்ற பிரான்) தன்னையழிய மாறியும் பரோபகாரம் பண்ணுகையே ஸ்வபாவமாகவுடையவன். தாழ்த்தது ஔபாதிகமென்றிருக்கிறாள். (செற்ற பிரான்) அர்ஜுநாதிகளும் சஸ்த்ரங்களோபாதியிறே; "மயைவைதே நிஹதா: பூர்வமேவ" என்று தானேயருளிச் செய்தானிறே.

விளக்கம் - (ஆடிய மாநெடுந் தேர்) - மனதின் வேகத்தைப் போன்ற அல்லது மனதை அபகரிக்கவல்ல விதத்தில் ஸஞ்சரிக்கும் குதிரைகள் பூட்டப்பட்ட பெருமை மிக்க தேரை உபகரணமாகக் கொண்டு; "பெருமை மிக்க தேர்" என்பதற்கு ப்ரமாணம், கீதை (1-14) – மஹதி ஸ்யந்தநே ஸ்த்திதௌ - உயர்ந்த்த தேரில் அமர்ந்திருந்த - என்பதாக உள்ள தேரைக் கொண்டு. (படை நீறெழச் செற்ற பிரான்) – தேரைக் கொண்டு ஏன் அழிக்கவேண்டும், திருச்சக்கரத்தாழ்வான் இல்லையோ என்பதற்கு விடை அளிக்கிறார்; "ஆயுதம் எடுக்கமாட்டேன்" என்று கூறிய வாக்கை நிறைவேற்றுவதற்காக, தேர்க்கால் கொண்டு அனைத்து படைகளையும் தூசியாக்கினான். (செற்ற பிரான்) - தன்னையும் முற்றிலுமாக மாற்றிக் கொண்டு உபகாரம் செய்வதையே தனது இயல்பாகக் கொண்டவன்; "தன்னை அழிய மாறுகை" என்றால் தனது ஸர்வாதிகாரத் தன்மையை மாற்றிக் கொண்டு, தேர்

ஓட்டும் சாரதியாக வந்து நின்றமை. இப்போது அவன் வரவில்லை என்றபோதிலும் “பிரான் - உபகாரி” என்று ஏன் கூறினாள் என்றால், காலம் தாழ்த்தியது அவனுடைய இயல்பு அல்ல, வந்து சேர்ந்த தற்காலிகத் தன்மை என்கிறாள். (செற்ற பிரான்) - ஆனால் படைகளை அழித்தவர்கள் அர்ஜுனன் போன்றவர்கள் அல்லவோ என்பதற்கு விடை, “அர்ஜுனன் போன்றவர்களும் இவன் திருக்கரத்தில் உள்ள ஆயுதங்களே ஆவர்” என்பதாகும்; இதற்கு ப்ரமாணம் கீதை (11-33) – மயைவைதே நிஹதா: பூர்வமேவ – அவர்கள் என்னால் முன்னரே கொல்லப்பட்டவர்கள் ஆவர் – என்பதாகும்.

வ்யாக்யானம் - (சூடிய தண்டுளபமுண்ட) ஸாரத்யம் பண்ணுகிறபோது வைத்த வளையத்திலே மது பாடும் பண்ணுகிற வண்டுகள். அவதாரங்களில் ஏதேனுமொன்றாலே வளையம் வைக்கிலும், அவ்வவஸ்த்தையை ப்ராபித்தநுகூலிக்கிறது திருத்துழாயாகக் கடவது. (தூ மது வாய்கள் கொண்டே) அவ்வளையத்தில் மதுவைப் பாநம் பண்ணி சுத்தமாய் இனிதான வாய்களைக் கொண்டு; இனிதான பேச்சையுடைத்தாயிருக்கை யென்றுமாம்.

விளக்கம் - (சூடிய தண்டுளபமுண்ட) - சாரதியாக நின்று தேரோட்டியபோது அணிந்து கொண்ட துளசிமாலைகளில் உள்ள மதுவைப் பருகும் வண்டுகள். ஆனால் க்ருஷ்ண அவதாரத்தில் துளசி மாலை உண்டோ என்பதற்கு விடை அருளிச்செய்கிறார்; அவதாரங்களில் ஏதேனும் ஒரு அவதாரம் அல்லது ஒருமுறை துளசிமாலை சூடினாலும், அந்த நிலையை வெளிப்படுத்தி நன்மை செய்வதாக துளசி உள்ளது. (தூ மது வாய்கள் கொண்டே) - அடுத்து, “சூடிய - கொண்டு” என்பதற்கு இரண்டுவிதமாகப் பொருள் கூறுகிறார். இதில் “அவ்வளையத்தில்” என்பது தொடங்கி முதல் பொருளைக் கூறுகிறார்; அந்தத் துளசி மாலையில் உள்ள மதுவைப் பருகியதன் மூலம் தூய்மையான இனிய சொற்கள் கொண்ட வாய் மூலமாக; இந்தப் பொருளில் “உண்ட” என்பது உட்கொள்வதாகவும், “மது” என்பது இனிமை என்றும் கருத்து. அடுத்து “இனிதான பேச்சை” என்பதாக இரண்டாவது பொருளை அருளிச் செய்கிறார்; இனிமையான வாய் கொண்டு. “வாய்” என்பது சொற்களைக் குறிக்கும்; அதாவது அவன் வருகையை உணர்த்தவல்ல இனிமையான சொற்கள்.

வ்யாக்யானம் - (தூ மது வாய்கள் கொண்டு ஓடி வந்தென் குழல் மேலொளி மாமலரூதீரோ) "வாஹி வாத" சாக்ஷுஷமல்லாமையாலே நீ பெற்ற பேறு என்? "த்வயி மே காத்ர ஸம்ஸ்பர்ச:" நம்முடைய கரணங்களுக்கு ஸ்பர்சம் உன் பக்கலிலேயாயிற்றே. நமக்குத் தொட்டாரைத் தொட்டாயிற்றே. "சந்த்ரே த்ருஷ்டி ஸமாகம:" தர்சநத்தோடொத்ததிறே எனக்கு ஸ்பர்சமும். அற்றது பொருந்தும்படி வார்த்தை சொல்லவல்ல வாயைக் கொண்டு. "த்ருஷ்டா ஸீதா" என்றாற்போலே. என்னையும் மது பாநம் பண்ணுவித்து நீங்களும் மது பாநம் பண்ணுங்கோள்.

விளக்கம் - (தூ மது வாய்கள் கொண்டு ஓடி வந்தென் குழல் மேலொளி மாமலரூதீரோ) - மேலே கூறப்பட்ட இரண்டுவிதமான பொருள்களில், முதல் பொருளுக்கான ஒரு உரையாடலைக் காண்பிக்கிறார்; இதற்கு யுத்தகாண்டம் (5-6) - வாஹி வாத: யத: கந்தா தாம் ஸ்ப்ருஷ்ட்வா மாமலி ஸ்ப்ருச த்வயி மே காத்ர ஸம்ஸ்பர்ச: சந்த்ரே த்ருஷ்டி ஸமாக: - வாயுபகவானே! எனது ஸீதை உள்ள இடத்தில் நீ நன்றாக வீசி, அவளுடைய திருமேனியைத் தழுவி விட்டு அதன் பின்னர் அப்படியே இங்கு வந்து எனது சரீரத்தையும் தழுவுவாயாக. அதன் முலம் எனக்கு மனதில் அமைதி ஏற்படும். ஆகாயத்தில் உள்ள சந்திரனை அவள் காண்கிறாள்; அதே சந்த்ரனை நானும் காண்கிறேன்; இதில் ஒரு மகிழ்ச்சி ஏற்படுவது போன்று ஆகும் - என்ற ச்லோகத்தை வ்யாக்யானம் செய்கிறார். (வாஹிவாத) - பார்க்கப்படாமல் இருந்ததால் நீ அடைந்த பேறு என்னே! அதாவது யாராலும் காணப்படாமல் உள்ள காற்றானது பயம் இன்றி எங்கும் செல்லலாம் என்று கருத்து. (த்வயி) - நம்முடைய உடல் உறுப்புக்களுக்குத் தீண்டுதல் என்பது உன் மூலமாக அல்லவோ ஏற்படுகிறது; இதன் மூலம் ஸீதையை அனுபவிக்க இயலாததால் வந்த இழப்பு வெளிப்படுகிது. (சந்த்ரே) - சந்த்ரனைக் காண்பதன் மூலம், "அவள் கண்ட சந்த்ரன்" என்பதால் எனது உயிர் நிலைப்பது போன்று, அவளைத் தீண்டிய காற்றான உனது தீண்டுதலும் எனக்கு உயிர் தாங்க வைக்கும் உபகரணமாகும். அடுத்து "வாய் கொண்டு" என்பதற்குக் கூறப்பட்ட இரண்டாவதாக பொருளில், சொற்களுக்குத் தூய்மை என்ன என்பதை "அற்றது" என்று தொடங்கும் இரண்டு வாக்கியங்கள் மூலம் கூறுகிறார்; இழந்தது மீண்டும் பொருந்தும்படியாக நற்சொற்கள் கூறவல்ல வாயைக் கொண்டு. ஸுந்தரகாண்டம் (35-10) - த்ருஷ்டா ஸீதா - ஸீதை காணப்பட்டாள் - என்று கூறியது போன்று, என்னையும் மதுபானம் செய்யும்படிச் செய்து, நீங்களும் மது பானம் செய்வீர்களாக.

ஸ்வாமி நம்மாழ்வார் திருவடிகளே சரணம்
ஸ்வாமி நம்பிள்ளை திருவடிகளே சரணம்
ஸ்வாமி வடக்குத்திருவீதிப்பிள்ளை திருவடிகளே சரணம்

...தொடரும்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:
ஸ்வாமி பெரியாழ்வார் அருளிச் செய்த

பெரியாழ்வார் திருவாய்மொழி

இதற்கு ஸ்வாமி திருவாய்மொழிப்பிள்ளை அருளிச் செய்த
ஸ்வாபதேச வ்யாக்யானம் (மூலம் மட்டும்) மற்றும்
ஸ்வாமி மணவாளமாமுனிகள் அருளிச் செய்த
வ்யாக்யானம் (மூலமும், எளிய தமிழ்நடையும்)
(பகுதி – 5)

1-1-8. பத்து நாளும் கடந்த இரண்டா நாள்
எத்திசையும் சய மரம் கோடித்து
மத்த மா மலை தாங்கிய மைந்தனை
உத்தானம் செய்து உகந்தனர் ஆயரே

பொருள் - பன்னிரண்டாம் நாளான பெயர் சூட்டும் நாளிலே, அனைத்து திசைகளிலும் உயர்ந்த கொடிக்கம்பங்களை நாட்டி, தோரணங்களால் அலங்கரித்து, மதம் கொண்ட யானைகள் நிறைந்த கோவர்தனம் என்னும் மாமலையை எடுத்துத் தாங்கிய செருக்குடையவனை, ஆயர்கள் தத்தம் கைகளில் வைத்து மகிழ்ந்தனர்.

திருவாய்மொழிப்பிள்ளை ஸ்வாபதேசம் - (பத்துநாளுமித்யாதி) இவர் மங்களாசாஸந பரராகையாலே அவதரித்த நாளையொளித்து பன்னிரண்டா நாளென்கிறார். (எத்திசையித்யாதி) எல்லா திக்குக்களிலும் ஒருவர்க் கொருவர் மேலாக வேணுமென்று வெற்றி கொண்டு ஒன்றுக்கொன்று மேலாக தோரணங்கள் நாட்டிக் கோடித்துக் கொடி கட்டி. (மத்தவித்யாதி) மத்த கஜங்கள் முதலானவை மறிந்து விழும்படியாக மலையைத் தாங்கின மைந்தனென்றது. "யுகேயுகேஸம் பவாமி"ப்படியே. மைந்து - மிடுக்கும், பிள்ளையும். (உத்தான மித்யாதி) ஒருவர்க்கொருவர் கைகளிலே எடுத்து ஆயரெல்லாரும் உகந்து செல்லாநின்றார்கள்.

மாமுனிகள் வ்யாக்யானம் - (பத்துநாளும் கடந்தவிரண்டா நாள்) பத்து நாளும் கடந்தவிரண்டாம் நாளான நாமகரண திவஸத்திலே. (எத்திசையும் சயமரம் கோடித்து) எல்லா திக்குக்களிலும் ஐய ஸூசகமான தோரணம் நாட்டி அலங்கரித்து. (மத்த மாமலை தாங்கிய மைந்தனை) வர்ஷாபத் ரக்ஷணார்த்தமாக, மக்த கஜங்களையுடைத்தான பெரியமலையை எடுத்து தரித்துக் கொண்டு நின்ற மிடுக்கனை. பிற்பாடராகையாலே, தத்காலத்திலன்றிக்கே, பிற்காலத்திலுள்ள சேஷ்டிதங்களையும் அவ்வஸ்துவுக்கு நிரூபகமாக்கி அருளிச்செய்யலாமிறே ஆழ்வார்க் கு (உத்தானம் செய்து உகந்தனர் ஆயரே) இடையரெல்லாரும் ஸ்நேஹாதிசயத்தாலே தனித்தனியே தந்தாம் கைகளிலே எடுத்துக் கொண்டு ப்ரீதரானார்களென்கை,

விளக்கம் - (பத்து நாளும் கடந்த இரண்டா நாள்) - பத்து நாட்கள் கழிந்து இரண்டாவது நாளான, அதாவது பன்னிரண்டாவது நாளான பெயர் சூட்டும் நாளிலே, (எத்திசையும் சயமரம் கோடித்து) - அனைத்து திசைகளிலும், தனது பிள்ளைக்குப் பெயர் சூட்டப்படும் நாள் இது என்று ஒவ்வொருவரும் தங்களது ப்ரீதியினால் போட்டியிட்டு, உயர உயர, தோரணம் கட்டுகிற கொடிக்கம்பங்களை நாட்டி, தோரணம் கட்டி அலங்கரித்து, (மத்த மாமலை தாங்கிய மைந்தனை) - மதம் கொண்ட யானைகள் நிறைந்த கோவர்தன மாமலையை கையில் எடுத்து தாங்கி நின்று "காப்பாற்றினோம்" என்னும் செருக்கினை உடைய மைந்தன். இங்கு ஒரு கேள்வி எழக்கூடும்; பன்னிரண்டு நாட்களிலேயே கோவர்தன மலையைத் தூக்கினான் என்று எவ்வாறு சொல்லமுடியும்? அதற்கு விடை அளிக்கிறார். ஆழ்வார் பிற்காலத்திலிருந்து பாடுகிறதால், அந்நாள் வரை மட்டுமுள்ள லீலைகளை சொல்லுவதோடு நிற்காமல், பிற்காலத்தில் வர இருக்கும் லீலைகளையும் க்ருஷ்ணனுக்கு பொருத்தி அருளிச்செய்கிறார்; பத்தி ஏய்ந்த இயல்வு இது; அதாவது ப்ரீதியினால் விளைவதால் எவ்விதமான தடையும் இல்லை. (உத்தானம் செய்து உகந்தனர் ஆயரே) - ஆயர்கள் எல்லோரும் அதிசயமான சிநேகத்தால் தனித்தனியே தமது கைகளில் எடுத்துக்கொண்டு மகிழ்ந்தனர்.

1-1-9. கிடக்கில் தொட்டில் கிழிய உதைத்திடும்
எடுத்துக் கொள்ளில் மருங்கை இறுத்திடும்
ஒடுக்கிப் புல்கில் உதரத்தே பாய்ந்திடும்
மிடுக்கு இமையால் நான் மெலிந்தேன் நங்காய்

பொருள் - பரிபூரணமாக உள்ள பெண்களே! இப்பிள்ளைத் தொட்டிலில் கிடந்தான் என்றால், தொட்டிலானது சிதையும்படிக்கு உதைத்து கொண்டே இருப்பான். இடுப்பில் இப்பிள்ளையை எடுத்துக்கொண்டால், இடுப்பானது ஒடியும் அளவிற்கு நழுவ முயல்வான். எவ்விதமான குறும்பும் செய்ய இயலாதபடிக்கு என் மார்வோடு அணைத்து ஒடுக்கினால், வயிற்றில் பாய்ந்து உதைப்பான். இந்தக் குறும்புகளை எல்லாம் பொறுக்கவல்ல சக்தி என் பிள்ளைக்கு இல்லை. அதனால், இவன் உடலுக்கு என்ன நேருமோ என்று அஞ்சி நான் மிகவும் இளைத்தேன்.

திருவாய்மொழிப்பிள்ளை ஸ்வாபதேசம் அவதாரிகை - பருவத்துக்குத் தகுதியல்லாத சக்தி விசேஷமான சேஷ்டிதங்களை அநுஸந்திக்கிறார்.

திருவாய்மொழிப்பிள்ளை ஸ்வாபதேசம் - (கிடக்கிலித்யாதி) "கிடக்கில்" என்கையாலே ஓரிடத்தில் கிடவாமை தோற்றுகிறது. "தொட்டில் கிழிய உதைக்கும்" என்கையாலே திருவடிகளில் மார்த்தவத்துக்கு பயப்படுகிறார். "தளிர் புரையும் திருவடிக"ளிறே. (எடுத்தித்யாதி) எடுத்துக்கொள்ளில் மருங்கை முறியும்படி நோவப் பண்ணுகையாலே "இந்நோவு பிள்ளைக்கு மிகவுமுண்டாம்" என்று பிள்ளையுடைய சேஷ்டிதங்களை அமைத்து மார்வோடே அணைக்கில் வயிற்றிலே பாயாநிற்கும். முக்த்த சேஷ்டிதங்கள் பலவாகையாலே இவையெல்லாம் பொறுக்கவல்ல சக்தி பிள்ளைக்குப் போராதென்று போர இளைத்தேன். "நங்காய்" என்கிறது ஜாத்யேக வசநத்தாலே. நீங்களுமெல்லாம் பருவத்துக்குத் தக்க சேஷ்டிதங்களையுடைய பிள்ளையைப் பெற்று வளர்த்துப் போருகிற பூர்ணைகளிறே.

மாமுனிகள் வ்யாக்யான அவதாரிகை - திருவவதரித்தவளவில் ஊரடங்கலும் செய்த உபலாளா விசேஷங்களை அநுஸந்தித்து இனியரானார் கீழ்; இப்பாட்டில் பருவத்துக்குத் தகுதியல்லாத சேஷ்டிதங்களை அநுஸந்தித்து, திருத்தாயார்

ஸந்நிஹிகரானவர்களுக்குச் சொன்ன பாசுரத்தை, அவளான பாவனையாலே தாம் அநுஸந்தித்து இனியராகிறார்.

விளக்கம் – இதுவரை, க்ருஷ்ணன் திரு அவதாரம் செய்தபோது, ஊரெல்லாம் கொஞ்சி விளையாடியதைக் கண்டு இனியர் ஆனார். இந்தப் பாட்டில், பருவத்துக்குத் தகாத குறும்புகளைக் கண்டு யசோதை தன் அருகாமையில் நின்றவர்களுக்குச் சொன்னதை, அவளாகவே ஆகி, அந்த பாவனையாலே பெரியாழ்வார் சொல்லி இனியர் ஆகிறார்.

மாமுனிகள் வ்யாக்யானம் - (கிடக்கிலித்யாதி) தொட்டிலிலே வளர்த்தினால் அதிலே கிடந்தானாகில் தொட்டில் கிழியும்படி உதையாநிற்கும். (எடுத்துக் கொள்ளில் மருங்கையிறுத்திடும்) "திருவடிகளின் மார்த்தவத்துக்கு இது பொறாது" என்று அஞ்சி ஒக்கலையிலே எடுத்துக்கொள்ளில் புடை பெயர்ந்து ஒக்கலையை முறியாநிற்கும். (ஒடுக்கிப் புல்கில் உதரத்தே பாய்ந்திடும்) "இது அத்திருமேனியில் மார்தவத்துக்குப் பொறாது" என்று வ்யாபார க்ஷமனல்லாதபடி ஒடுக்கி மார்விலே அணைத்துக்கொள்ளில், திருவடிகளாலே வயிற்றிலே பாயாநிற்கும். (மிடுக்கிலாமையால் நான் மெலிந்தேன் நங்காய்) "இந்த சேஷ்டிதங்களையெல்லாம் பொறுக்கவல்ல சக்தி பிள்ளைக்குப் போராது" என்று நான் போர இளைத்தேன். "நங்காய்" என்று ஜாத்யேக வசநமாய் நங்கைமீரென்று; இப்படி நீங்களெல்லாரும் பருவத்துக்குத் தக்க சேஷ்டிதங்களையுடைய பிள்ளையைப் பெற்று வளர்க்கையாலே பூர்ணைகளா யிருக்கிறீர்களித்தனை.

விளக்கம் - (கிடக்கில் இத்யாதி) - தொட்டிலிலே உறங்க வைத்தால், அதில் கிடந்தவுடன் அந்தத் தொட்டிலே சிதையும்படிக்கு உதைக்கிறான். திருநெடுந்தாண்டகம் (1) - தளிர் புரையும் திருவடி – என்பதாக உள்ள திருவடிக்கு என்ன ஆகுமோ என்று அஞ்சுகிறாள். (எடுத்துக் கொள்ளில் மருங்கை இறுத்திடும்) - உள்ளங்காலினது மென்மையான தன்மைக்கு இது ஆகாது என்று அஞ்சி இடுப்பில் எடுத்துக்கொண்டால், இடம் பேர்ந்து, ஓரிடத்தில் இல்லாமல் கிளம்பிக் குதிக்க முயன்று, என் இடுப்பானது உடையும்படி நோவு படுத்துவான். (ஒடுக்கிப் புல்கில் உதரத்தே பாய்ந்திடும்) - இப்படி இவனுக்கு நோவு உண்டாகிறதே என்று, இவன் எவ்விதமான குறும்பும் செய்ய இயலாதபடிக்கு என் மார்போடு அணைத்து

ஒடுக்கினால், உள்ளங்காலினாலே என் வயிற்றில் பாய்ந்து உதைப்பான். (மிடுக்கு இலாமையால் நான் மெலிந்தேன் நங்காய்) – "இந்தக் குறும்புகளை எல்லாம் பொறுக்கவல்ல சக்தி என் பிள்ளைக்கு கிடையாதே", என்று நான் மிகவும் அஞ்சி இளைத்தேன். "நங்காய் – பூரணமான பெண்ணே" என்று ஒருமையில் சொல்லி இருந்தாலும், "நங்கைமீர் – பூரணமான பெண்களே" என்று பன்மையிலே கொள்ளவேண்டும். நீங்கள் எல்லோரும் பருவத்திற்கு ஏற்ற குறும்புகளையுடைய பிள்ளையைப் பெற்று வளர்க்கிறீர்கள்; ஆகையாலே, நிம்மதியாக இருக்கிறீர்கள்.

ஸ்வாமி பெரியாழ்வார் திருவடிகளே சரணம்
ஸ்வாமி திருவாய்மொழிப்பிள்ளை திருவடிகளே சரணம்
ஸ்வாமி மணவாளமாமுனிகள் திருவடிகளே சரணம்

...தொடரும்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:
ஸ்வாமி திருமங்கையாழ்வார் அருளிச் செய்த

பெரிய திருமொழி

இதற்கு ஸ்வாமி பெரியவாச்சான்பிள்ளை அருளிச் செய்த
வ்யாக்யானம் (மூலமும், எளிய தமிழ்நடையும்)
(பகுதி – 4)

பெரிய திருமொழி வ்யாக்யான ப்ரவேசம்

வ்யாக்யானம் - இவ்வாழ்வாராகிறார் ஆத்மாவை வெய்யிலிலே வைத்து உடம்பை நிழலிலே வைத்துப் போந்தா ரொருவராயிற்று. ஆத்மாவை வெய்யிலிலே வைக்கையாவது பகவத் விஷயத்தில் முதலிலே இழியாமை; உடம்பை நிழலிலே வைக்கையாவது அநாதிகாலம், விஷய ப்ரவணராய் அதுவே யாத்ரையாய்ப் போருகை. நிழலாவது தான் பகவத் விஷயமிறே. “வாஸுதேவ தருச்சாயா” பார்த்த பார்த்த விடமெல்லாம் நிழலாயிருக்கை. எங்குமொக்க நிழல் செய்த இந்நிழலிலல்லது புறம்பொதுங்க நிழலின்றிக்கே யிருக்கை. “நாதிசீதா ந கர்மதா” அறவவ்வலிடுதல் வேர்த்தல் செய்யாதிருக்கை “நரகாங்காரசமநீ” தானே யேறிட்டுக் கொண்ட நரகமாகிற பெருநெருப்பையும் அவிக்கவற்று. “ஸாகிமர்த்தம் ந ஸேவ்யதே” ப்ராப்தமன்றென்ன வொண்ணாது, துக்க நிவர்த்தக மன்றென்ன வொண்ணாது; “வயிறு நோவாகின்றது, சவி” என்பாரைப்போலே அநிச்சை சொல்லிக் கை வாங்குமித்தனையிறே யுள்ளது. அர்த்தத்தில் மாறாட்டமில்லை; ப்ரதிபத்தியில் மாறாட்டமேயுள்ளது. இந்நிழலிலே யிருந்து வைத்து “ஒதுங்கிற்றிலேன்” என்பாரைச் செய்யலாவ தில்லையே. “இவர் கண்ணால் காண்கிற விஷயங்களுக்கு அவ்வருகறியா திருக்கிறாராகில், நம்மையும் அவ்விஷயங்களோபாதி இவர் கண்ணுக்கிலக்காக்கினால் விரும்பாதொழியாரிறே” என்று பார்த்து, உகந்தருளின நிலங்களிலே வந்து ஸந்நிதி பண்ணி இவரை விஷயீகரித்துத் தன்படிகளை அடையக் காட்டிக் கொடுத்துத், தன்னாலல்லது

செல்லாதபடி பண்ணி இவரை அநுபவிப்பித்து, இங்கேயிருந்தே பரமபதத்திலுள்ளார்படி யாம்படி பண்ணி, அத்தேச ப்ராப்தியையு மிவர்க்குப் பண்ணிக் கொடுத்தானென்கிறது இப்ப்ரபந்தங்க ளெல்லாவற்றாலும்.

விளக்கம் – திருமங்கை ஆழ்வார் ஆகிய இவர், ஆத்மாவை வெய்யிலிலே வைத்தும், உடம்பை நிழலிலே வைத்தும் தனது காலத்தைக் கடந்தவரானார். ஆத்மாவை வெய்யிலிலே வைப்பது என்றால், ஸர்வேச்வரனைக் குறித்த விஷயத்தில் முதலில் பற்று இல்லாமல் இருப்பதாகும். உடம்பை நிழலிலே வைப்பது என்றால், கணக்கில்லாத காலத்திற்குப் புலன்கள் விரும்பும் இன்பத்தில் பற்று கொண்டவராக இருந்து, அதனையே வாழ்க்கையாகக் கருதிச் சென்றது ஆகும். நிழல் என்பது ஸர்வேச்வரனே ஆவான். கருடபுராணத்தில் - வாஸுதேவ தருச்சாயா ந அதிசீதா நகர்மதா நரகாங்காரசமநீ ஸாகிமர்த்தம்நஸேவ்யதே - வாஸுதேவன் என்னும் மரத்தின் நிழலானது மிகுந்த குளிர்ச்சியையும் வெப்பமும் அற்றது. அது நரகத் தீயின் வெப்பத்தையும் ஆற்றவல்லது. அதனை எந்தக் காரணத்தினால் அடைய இயலவில்லை? – என்பதை விளக்குகிறார். வாஸுதேவன் என்னும் மரமானது காண்கின்ற இடமெல்லாம் நிழலை அளிக்கிறது. எங்கும் பரந்து ஒருசேர நிழல் அளிக்கும் இத்தகைய நிழலைத் தவிர்த்து, வேறு ஒரு நிழலும் தேவைப்படாதபடிக்கு உள்ளது. இந்த நிழலானது மிகுந்த நடுக்கமும் அளிக்காது, வியர்க்கவும் வைக்காது. மனிதர்கள் தங்கள் செயல்களால், தாங்களே தேடி தங்கள் மீது சுமத்திக் கொண்ட, நரகம் என்னும் பெரும் நெருப்பை, இருந்த தடம் இல்லாதபடிக்கு அணைக்கவல்லது ஆகும். பின், எந்தக் காரணத்தினால் இந்த மரத்தினை அடைய இயலவில்லை? வாஸுதேவன் என்னும் மரமான அவனை அடைய இயலாது என்றும் கூற முடியாது; கர்மவினை அழியாததால் அடைய இயலவில்லை என்றும் கூற முடியாது; விளையாடுகின்ற குழந்தையைப் பார்த்து, தாயானவள், “உண்ண வா” என்று அழைத்தால், அந்த விளையாட்டின் இருக்கும் பற்றின் காரணமாக “வயிறு வலிக்கிறது, அதனால் நான் உண்ணவரமாட்டேன்; நீ திட்டவேண்டும் என்றால் திட்டிக்கொள்” என்று பிடிவாதமாய் உணவு உண்ண மறுக்கும் குழந்தையைப் போலவே, வெப்பம் என்னும் பிறவி அளிக்கும் சிற்றின்பத்தின் மீது பற்று கொண்டிருப்பதால் அல்லவோ, நிழல் என்னும் அவனை அடைய விருப்பம் கொள்ளாமல் பின்வாங்கும் தன்மை உலகத்தாரிடம் நிறைந்துள்ளது! இவ்வாறே, ஆழ்வாரும், புலன்கள் விரும்பும் சிற்றின்பத்தின் மீது பற்று கொண்டவராய்

இருந்து, ஸர்வேச்வரனான வாஸுதேவனைக் கைப்பற்றாமல் இருந்தார். இத்தகைய நிழலிலே “நான் ஒதுங்க மாட்டேன்” என்று இருப்பவர்களை என்ன செய்ய இயலும்? இவ்வாறு இருக்கும் இவரை, ஸர்வேச்வரன் எவ்வாறு திருத்தித் தன் பக்கம் இழுக்கிறார் என்பதை விளக்குகிறார். “இவர், தன் கண்ணால் காண்கின்ற விஷயங்களைத் தவிர்த்து மற்ற விஷயங்களை அறியாது இருக்கிறார் என்றால், நாமும் அவ்வாறே அவ்விஷயங்களைப் போலவே, இவர் கண்ணுக்கு இலக்காக்கி நின்றால், நம்மை விரும்பாமல் இவர் செல்ல முடியுமோ?” என்று ஸர்வேச்வரன் கருதினான். இந்த பூமியில், தன் உள்ளத்திற்கு உகந்த இடத்தில் வந்து கோயில் கொண்டு நின்றான். பின் ஆழ்வாரை ஆட்கொண்டு, தன் இருப்பிடத்தை அடைய வழி காட்டினான். தன்னை அனுபவிக்காமல் வாழ இயலாதபடிக்கு ஆழ்வாரைச் செய்து, பரமபதத்தில் உள்ளவர்கள் அனுபவிப்பது போன்று தனது பெருமைகளை, இந்த உலகில் இருக்கும்போதே அனுபவிக்கச் செய்தும், பரமபதத்தையும் அளித்தான். இவைகளைத் தனது அனைத்து ப்ரபந்தங்களின் மூலமும் காட்டுகிறார்.

ஸ்வாமி திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்
ஸ்வாமி பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்

...தொடரும்